George F. Root



பாமாலை 466 இயேசுவினண்டை வந்திடுவாய்

1 இயேசுவினண்டை வந்திடுவாய்
தாமதமின்றித் தீவிரமாய்;
அன்போடு நின்று மா ஊக்கமாய்
வா என்று அழைக்கிறார்.

பல்லவி

பாவம் இன்றிச் சுகித்திருப்போம்
மா சந்தோஷமாகச் சந்திப்போம்,
நல் மீட்பர் அண்டை சேர்ந்திருப்போம்,
பேரின்ப தேசத்தில்.

2 பாலரே, வாரும் தாராளமாய்
என்றுரைத்தாரே மா தயவாய்;
நேசரை நம்பி மகிழ்ச்சியாய்
தாமதமின்றி வா!

3 நேசரின் சத்தம் கேட்டறிவோம்,
நம்பிக்கையோடு வந்தடைவோம்
மீட்பரின் அன்பைக் கண்டுவப்போம்,
இன்னும் அழைக்கிறார்